BUDGET
2024



# நமது
# எதிர்காலத்தை ஒன்றிணைந்து
# உருவாக்குதல்

# முன்னுரை

என் சக சிங்கப்பூரர்களே,

2023 சவால் மிகுந்த ஓர் ஆண்டாக அமைந்தது. உலக நாடுகளுக்கு இடையிலான பூசல்களால் அனைத்துலகப் பொருளியல் பாதிப்படைந்தது. இக்கட்டான அந்த அயலகச் சூழலால், நமது பொருளியல் வளர்ச்சியும் குறைவாக இருந்தது.

நாம் பொருளியல் மந்தநிலையைத் தவிர்த்திருந்த போதிலும், சிங்கப்பூரர்கள் பலருக்கும் வருமான வளர்ச்சி பெருமளவில் ஏற்படவில்லை. வாழ்க்கைச் செலவினம் குறித்த கவலைகளும் நீடிக்கின்றன. தொழில்களும் அதிகரிக்கும் செலவுகளை எதிர்நோக்கின.

2024 வரவுசெலவுத் திட்டத்தில், வாழ்க்கைச் செலவினம் குறித்த சிங்கப்பூரர்களின் கவலைகளுக்குத் தீர்வு காணவும், தொழில்களுக்கு ஆதரவு வழங்கவும் பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம்.

இந்த வரவுசெலவுத் திட்டத்தில், முன்னேறும் சிங்கப்பூர்த் திட்டத்தின்கீழ் மேன்மேலும் சிறந்த சிங்கப்பூரை உருவாக்குவதற்கான நமது தொலைநோக்கை ஈடுசெய்யத் தேவையான குறிப்பிட்ட நடவடிக்கைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

நம் மக்களுக்கு இன்னும் அதிகமான வாய்ப்புகளையும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும் உருவாக்கித் தர, நமது பொருளியலில் புத்தாக்கத்தையும் செயலாற்றலையும் கட்டிக்காப்போம்.



குடும்பங்களுக்கும் மூத்தோருக்கும் மேலும் உத்தரவாதமளித்து, சிங்கப்பூரை அனைவரின் மனங்கவர்ந்த இல்லமாக உருவாக்குவோம்.

சிங்கப்பூரர்கள் அனைவரும் தங்கள் ஆற்றல்களை முழுமையாக வெளிப்படுத்த வாய்ப்புகள் கிடைப்பதை உறுதிசெய்வோம். மேலும் நியாயமான, சமத்துவம் மிகுந்த, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவோம்.

நமது எதிர்காலத்தை நோக்கி முன்னேறிச் செல்லும் பயணத்தில் உங்களுக்குத் துணைவர ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

சிங்கப்பூர் மேன்மேலும் சிறப்படைய, நமது எதிர்காலத்தை ஒன்றிணைந்து உருவாக்குவோம்.

**லாரன்ஸ் வோங்**
**துணைப் பிரதமர்**
**நிதி அமைச்சர்**






# உள்ளடக்கம்


சிங்கப்பூரர்களுக்கு ஆதரவளித்தல்.................... பக்கம் 5

நமது மக்களில்
முதலீடு செய்தல்............................................ பக்கம் 14

தொழில்களுக்கு ஆதரவளித்தல்;
வளர்ச்சியை ஊக்குவித்தல்............................. பக்கம் 17

மீள்திறன்மிக்க எதிர்காலத்தை
உருவாக்குதல்................................................ பக்கம் 21

# சிங்கப்பூரர்களுக்கு ஆதரவளித்தல்



# உங்களுக்கான உத்தரவாதம்
## ஏப்ரல் 2024 - மார்ச் 2025

**2024**

| மாதம் | | |
|---|---|---|
| ஏப்ரல் | யு-சேவ் [மேம்படுத்தப்பட்ட]<br>$110 முதல் $190 வரை | சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி<br>0.5 முதல் 1 மாதம் வரை |
| ஜூன் | சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள் [புதிது]<br>$300 | |
| ஜூலை | யு-சேவ் [மேம்படுத்தப்பட்ட]<br>$165 முதல் $285 வரை | சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி<br>0.5 முதல் 1 மாதம் வரை |
| ஆகஸ்ட் | ரொக்கம்<br>$450 அல்லது $850 | மத்திய சேமநிதி மெடிசேவ் கணக்கு<br>$150 முதல் $450 வரை |
| செப்டம்பர் | ரொக்கம் [புதிது]<br>$200 முதல் $400 வரை | |
| அக்டோபர் | யு-சேவ் [மேம்படுத்தப்பட்ட]<br>$110 முதல் $190 வரை | சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி<br>0.5 முதல் 1 மாதம் வரை |

***Nota:** Bantuan tertakluk kepada kelayakan individu atau keluarga.*

# சிங்கப்பூரர்களுக்குக் கூடுதல் ஆதரவை வழங்கும் ரொக்கமும் இதர அனுகூலங்களும்



## நவம்பர்

தேசியச் சேவை LifeSG சிறப்புத்தொகை [புதிது]
$200

## டிசம்பர்

ரொக்கம்
$200 முதல் $600 வரை

மத்திய சேமநிதி மெடிசேவ் கணக்கு [புதிது]
$100 முதல் $1500 வரை

மத்திய சேமநிதி ஓய்வுக்காலக் கணக்கு அல்லது சிறப்புக் கணக்கு [புதிது]
$1000 முதல் $1500 வரை

## 2024 மதிப்பீட்டு ஆண்டு

2024 மதிப்பீட்டு ஆண்டுக்கான தனிநபர் வருமான வரித் தள்ளுபடி [புதிது]
$200 வரை

## 2025

## ஜனவரி

சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள் [புதிது]
$300

யு-சேவ் [மேம்படுத்தப்பட்ட]
$165 முதல் $285 வரை

சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி [மேம்படுத்தப்பட்ட]
0.5 முதல் 1 மாதம் வரை

## பிப்ரவரி

மத்திய சேமநிதி மெடிசேவ் கணக்கு
$150

மூத்தோருக்கான போனஸ்
$200 முதல் $300 வரை

## மார்ச்

மத்திய சேமநிதி ஓய்வுக்காலக் கணக்கு அல்லது சிறப்புக் கணக்கு [புதிது]
$400 முதல் $1,000 வரை

குறிப்பு: தனிநபர்கள் அல்லது குடும்பங்களின் தகுதிநிலையைப் பொறுத்து அனுகூலங்கள் நிர்ணயிக்கப்படும்.

# சிங்கப்பூரர்களுக்கான ஆதரவு

## ஏப்ரல் 2024 - மார்ச் 2025

## தனிநபர்கள்

### ரொக்கம்

- 21 வயதுக்கும் மேற்பட்ட அனைத்து சிங்கப்பூரர்களுக்கும் **$200 முதல் $2,150 வரை**

### தனிநபர் வருமான வரித் தள்ளுபடி

- 2024 மதிப்பீட்டு ஆண்டுக்குச் **செலுத்தப்படவேண்டிய வரிக்கு, 50%** தள்ளுபடி; அதிகபட்சம் $200

### மத்திய சேமநிதி மெடிசேவ் கணக்கு

- அனைத்து சிங்கப்பூரர்களுக்கும் **$100 முதல் $1,650 வரை**

### மத்திய சேமநிதி ஓய்வுக்காலக் கணக்கு அல்லது சிறப்புக் கணக்கு

- 1973ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் பிறந்த சிங்கப்பூரர்களுக்கு **$400 முதல் $2,500 வரை**

### தேசியச் சேவை LifeSG சிறப்புத்தொகை

- அனைத்து முன்னாள், இந்நாள் தேசிய சேவையாளர்களுக்கும் **$200**

## குடும்பங்கள்

### சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்

- அனைத்து சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கும் **மொத்தம் $600**

### யு-சேவ்

- வீவக வீடுகளுக்கு **$550 முதல் $950 வரை**

### சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி

- வீவக வீடுகளுக்கு **2 முதல் 4 மாதம்** வரையிலான கழிவு


குறிப்பு: தனிநபர்கள் அல்லது குடும்பங்களின் தகுதிநிலையைப் பொறுத்து அனுகூலங்கள் நிர்ணயிக்கப்படும்.

# மாஜூலா தொகுப்புத்திட்டம்
## 1973 அல்லது அதற்கு முன்னர் பிறந்த சிங்கப்பூரர்களுக்கு



**$8.2 பில்லியன்**

ஒய்வுக்காலத்திற்கும் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்கும்



**1.6 மில்லியன்**

முன்னோடி, மெர்டேக்கா தலைமுறை மூத்தோர் உட்பட சிங்கப்பூரர்கள்

## சம்பாதித்துச் சேமியுங்கள் போனஸ் திட்டம் (மார்ச் 2025 முதல்)

- மாதத்திற்கு $6,000 வரை வருமானம் ஈட்டும் சிங்கப்பூரர்களுக்கு மத்திய சேமநிதி ஒய்வுக்காலக் கணக்கு அல்லது சிறப்புக் கணக்கில் **$400 முதல் $1,000** வருடாந்தர ஊக்கத்தொகை

## ஓய்வுக்காலச் சேமிப்பு போனஸ் (டிசம்பர் 2024)

- 2023 பணி ஓய்வுக்காலத்திற்கான அடிப்படைத் தொகைக்குக் ($99,400) குறைவாக ஓய்வுக்காலச் சேமிப்புத் தொகையை வைத்துள்ள சிங்கப்பூரர்களுக்கு மத்திய சேமநிதி ஓய்வுக்காலக் கணக்கு அல்லது சிறப்புக் கணக்கில் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் **$1,000 முதல் $1,500** ஊக்கத்தொகை

## மெடிசேவ் போனஸ் (டிசம்பர் 2024)

- மத்திய சேமநிதி மெடிசேவ் கணக்கில் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் **$750 முதல் $1,500** ஊக்கத்தொகை

குறிப்பு: அனுகூலங்கள் தனிநபரின் தகுதிநிலையைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும்

## குடும்பங்களுக்கு ஆதரவளித்தல்

- பொதுச் சந்தையில் வீவக வீடுகளை வாடகைக்கு எடுக்கத் தகுதிபெறும் குடும்பங்களுக்கு, ஓராண்டு பயன்படுத்தவல்ல **பிள்ளைப்பேற்றுக்கான இடைக்காலக் குடியிருப்புத் திட்டப் பற்றுச்சீட்டு (பொதுச் சந்தை)**



- **முழுநேரக் குழந்தைப் பராமரிப்புச் சேவையின் மாதாந்தர கட்டண உச்ச வரம்பு** அரசாங்க ஆதரவு பெற்ற பாலர் பள்ளிகளில் 2025இல் குறைக்கப்படும்: முதன்மை நிறுவனங்களுக்கு $640; பங்காளி நிறுவனங்களுக்கு $680

- குறைந்த வருமானக் குடும்பங்கள் அனைத்துக்கும் நடப்பில் இருக்கும் **பாலர் பள்ளி நிதியுதவிகள்** மேம்படுத்தப்படும்

- இளம் பிள்ளைகளைக் கொண்டுள்ள குறைந்த வருமானக் குடும்பங்களுக்குப் பாலர் பள்ளிக் கல்வி, வேலை நியமனம், நிதி நிலைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்தவும் வீட்டுரிமைக்குச் சேமிக்கவும் ஆதரவளிக்கும் **கொம்லிங்க் பிளஸ் முன்னேற்றத் தொகுப்புத்திட்டங்கள்**



- 2025 மதிப்பீட்டு ஆண்டிலிருந்து **சார்ந்திருப்போர் தொடர்பான தனிநபர் வருமான வரி நிவாரணத்திற்கான** வருடாந்தர வருமான உச்ச வரம்பு **$8,000க்கு** உயர்த்தப்படும்

## உடற்குறையுள்ளோருக்கு ஆதரவளித்தல்




- சிங்கப்பூர்க் குடியுரிமைப் பெற்ற, சிறப்புக் கல்விக்கான பள்ளி அல்லது மாணவர் பராமரிப்பு நிலையங்களில் பயிலும் சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கான கைச்செலவுகள் குறைக்கப்படும்

- பயிலரங்குகளும் பகல்நேர நடவடிக்கை நிலையங்களும் விரிவாக்கம் செய்யப்படுவதன்மூலம், வேலை நியமனம், சமூக ஒருங்கிணைப்பு ஆகிய அம்சங்களில் கூடுதல் ஆதரவு



## துடிப்புடன் மூப்படைவதற்கு ஆற்றலளித்தல்



- துடிப்புடன் மூப்படைதல் நிலையங்களை விரிவுபடுத்துதல், இல்லங்களிலும் போக்குவரத்து உள்கட்டமைப்புகளிலும் மூத்தோருக்கு மேலும் உகந்த சாதனங்களை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட வழிகளில் மூத்தோர் இல்லங்களிலும் சமூகங்களிலும் துடிப்புடன் செயல்பட ஆதரவளிக்கும் **'நலமாக மூப்படைதல்' எஸ்ஜி செயல்திட்டத்துக்கு $3.5 பில்லியன்**

## சுகாதாரப் பராமரிப்புக்கான உத்தரவாதம்

- 1974 முதல் 2003 வரை பிறந்த அனைத்து சிங்கப்பூரர்களுக்கும் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் **$300** வரையிலான **மெடிசேவ் போனஸ்** (1973 அல்லது அதற்கு முன்பாகப் பிறந்த சிங்கப்பூரர்கள் மாஜூலா தொகுப்புத்திட்டத்தில் உள்ள மெடிசேவ் போனஸ்மூலம் பயனடைவர்)

- **சுகாதாரப் பராமரிப்பு, அதுசார்ந்த சமூக ஆதரவு நிதியுதவித் திட்டங்கள்** ஆகியவற்றுக்கான தனிநபர் மாதாந்தரக் குடும்ப வருமான வரம்பு உயர்த்தப்படுதல்



# ஓய்வுக்காலத் தேவைகளுக்கு ஆதரவளித்தல்

- ஓய்வுக்காலத்திற்கும் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகளுக்கும் ஆதரவளிக்க, 1973க்கும் முன்னர் பிறந்த 1.6 மில்லியன் சிங்கப்பூரர்களுக்கு **மாஜுலா தொகுப்புத்திட்டம்**


- **மூத்தோர் ஆதரவுத் திட்டத்தின்** காலாண்டு வழங்குதொகைகள் **20%** உயர்த்தப்படுவதோடு, தகுதிபெறும் தனிநபர் குடும்ப வருமான வரம்பும் **$2,300க்கு** உயர்த்தப்படுதல்



- 55 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களை உள்ளடக்கும்படி ஓய்வுக்காலக் கணக்கில் **வெள்ளிக்கு வெள்ளி அடிப்படையிலான சேமிப்புத் திட்டத்தை** விரிவுபடுத்துவதோடு, அதற்கான வருடாந்தர, வாழ்நாள் உச்சவரம்பு **$2,000,** $20,000 என முறையே உயர்த்தப்படுதல்

- **மத்திய சேமநிதியின் மேம்படுத்தப்பட்ட ஓய்வுக்காலத் தொகை, அடிப்படைத் தொகையைவிட 4 மடங்கு** உயர்த்தப்படுதல்

- தகுதிபெற்ற 65 வயதுக்கும் மேற்பட்ட பணி ஓய்வுபெற்றோருக்குக் குடியிருப்புச் சொத்து **வரிக் கட்டணத்துக்கான வட்டியில்லா தவணைத் திட்டத்தை (GIRO) 24 மாதங்களுக்கு** நீட்டித்தல்



# நமது மக்களில் முதலீடு செய்தல்



# பணியிடைக்காலத் திறன் மறுபயிற்சி

- 40 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கு **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் திறன் மேம்பாட்டுத் திட்டம்**

    - மே 2024இல், **$4,000 ஸ்கில்ஸ்ஃபியூச்சர் (பணியிடைக்கால) பயிற்சி உதவி நிரப்புத்தொகை;** சிறந்த வேலைவாய்ப்புகளைக் கொண்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்துறை சார்ந்த பயிற்சி வகுப்புகளுக்குப் பயன்படுத்தலாம்



    - அரசாங்க நிதியாதரவு பெற்றுள்ள மற்றொரு முழுநேரப் பட்டயக் கல்விக்கு **மேம்படுத்தப்பட்ட பணியிடைக்கால நிதியுதவி**

    - தேர்ந்தெடுக்கப்பட்ட முழுநேர வகுப்புகளுக்கு, 24 மாதம் வரை, **$3,000 வரையிலான மாதாந்தர ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பணியிடைக்கால பயிற்சிப் படித்தொகை**



## குறைந்த வருமான ஊழியர்கள்



- ஜனவரி 2025 முதல் **வேலைநலன் துணை வருமானத் திட்ட** வழங்குதொகைகள், ஆண்டுக்கு **$4,900** வரை உயர்த்தப்படும்; தகுதிபெறும் வருமான உச்ச வரம்பு **$3,000க்கு** உயர்த்தப்படும்

- ஜூலை 2024 முதல் **தகுதிபெறும் உள்ளூர் சம்பளம் $1,600க்கு** உயர்த்தப்படும்

- **படிப்படியாக உயரும் சம்பள உதவித்தொகைத் திட்டத்திற்கான** இணை நிதி, இவ்வாண்டு அதிகபட்சம் **50%** ஆக உயர்த்தப்படும்; 2025இல் அதற்கான சம்பள உச்ச வரம்பு **$3,000க்கு** உயர்த்தப்படும்

## தொழில்நுட்பக் கல்விக் கழகப் பட்டதாரிகள்

- பட்டயக் கல்வித் தகுதியைப் பெற விரும்பும் இளம் தொழில்நுட்பக் கல்விக் கழகப் பட்டதாரிகளுக்குத் **தொழில்நுட்பக் கல்விக் கழக முன்னேற்ற விருது**
    - பலதுறைத் தொழிற்கல்லூரியில் சேர்ந்தவுடன், உயர்நிலைக் கல்விக்குப் பிந்திய கணக்கில் **$5,000** தொகை நிரப்பப்படும்
    - பட்டயக் கல்வியின் நிறைவில், மத்திய சேமநிதி சாதாரணக் கணக்கில் **$10,000** தொகை நிரப்பப்படும்

# தொழில்களுக்கு ஆதரவளித்தல்; வளர்ச்சியை ஊக்குவித்தல்



## அதிகரித்துவரும் தொழில் செலவுகளைச் சமாளித்தல்

### தொழில்நிறுவனங்களுக்கான $1.3 பில்லியன் ஆதரவுத் தொகுப்புத்திட்டம்




- 2024 மதிப்பீட்டு ஆண்டுக்கு **50% நிறுவன வருமான வரித் தள்ளுபடி;** அதிகபட்சமாக $40,000
    - 2023இல் குறைந்தது ஓர் உள்ளூர் ஊழியரைப் பணியமர்த்திய நிறுவனங்களுக்குக் குறைந்தபட்சம் **$2,000** ரொக்கம்
- **தொழில்நிறுவன நிதியாதரவுத் திட்டத்தை** மேம்படுத்துதல்
- **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் தொழில்நிறுவனச் சிறப்புத் தொகை** ஜூன் 2025 வரை நீட்டிக்கப்படுதல்

# போட்டித்தன்மைக்கான அனுகூலங்களை வலுப்படுத்துதல்



- **ஆய்வு, புத்தாக்கம், தொழில்முனைப்பு 2025இல் $3 பில்லியன்** முதலீடு
- **திருப்பித் தரப்படும் முதலீட்டுத் தொகை** திட்டத்தை அறிமுகப்படுத்துதல்
- **தேசிய உற்பத்தித்திறன் நிதியில் $2 பில்லியன்** நிரப்புத்தொகை
- **நிதித்துறை மேம்பாட்டு நிதியில் $2 பில்லியன்** நிரப்புத்தொகை
- **திறனாற்றல் உருமாற்றத்திற்கான பங்காளித்துவத்** திட்டத்தை மேம்படுத்துதல்



## வளரும் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்தல்



- 5 ஆண்டில் **தேசிய செயற்கை நுண்ணறிவு உத்தி 2.0இல் $1 பில்லியனுக்கும்** மேல் முதலீடு
- **நாடளாவிய விரிவலைக் கட்டமைப்பை 10 Gbpsக்கு** மேம்படுத்துதல்

## நீடித்த நிலைத்தன்மை சார்ந்த அம்சங்களில் தொழில்நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல்




- **தொழில்நிறுவன நிதியாதரவுத் திட்டம் - பசுமைத் தீர்வுகள்:** நீட்டிப்பு, விரிவாக்கம்
- **எரிசக்தி சிக்கனத்திறன் மானியம்** கூடுதலான துறைகளுக்கு விரிவாக்கம்

# மீள்திறன்மிக்க எதிர்காலத்தை உருவாக்குதல்



## எரிசக்தி வளங்களைப் பாதுகாத்தல்



- எரிசக்தி உள்கட்டமைப்பில் முதலீடு செய்ய, முதற்கட்டமாக **$5 பில்லியன்** தொகையைக் கொண்டு **எதிர்கால எரிசக்தி நிதி** உருவாக்கம்

## பாதுகாப்பான சிங்கப்பூர்



- புதிய **தேசிய இணையப்பாதுகாப்புத் தளபத்திய நிலையம்** ஒன்றை நிறுவுதல்



## மேலும் ஒன்றிணைந்த தேசத்தை உருவாக்குதல்

- **விளையாட்டு வசதிகளுக்கான பெருந்திட்டத்தின்**வழி விளையாட்டு வசதிகளை உருவாக்குதல்; புதுப்பித்தல>



- One Team **சிங்கப்பூர் நிதியில் $20 மில்லியன்** நிரப்புத்தொகை; ஓராண்டுக்கு நீட்டிப்பு

- முக்கிய விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான மையமாக சிங்கப்பூரை முன்னிறுத்துதல்



- **கலைத்துறைக்கான நமது எஸ்ஜி பெருந்திட்டத்தில் $100 மில்லியன்** முதலீடு

- **அறநிறுவனத் திறனாற்றல் நிதியின் ஒத்துழைப்பு மானியம்** மூன்று ஆண்டுக்கு நீட்டிப்பு

- **வெளிநாட்டு மனிதநேய நன்கொடைகளுக்கான வரிக் கழிவுத் திட்டம்** அறிமுகம்



MINISTRY OF FINANCE
SINGAPORE

**மேல்விவரங்களுக்கு**
**www.singaporebudget.gov.sg**

go.gov.sg/2024budget

16 பிப்ரவரி 2024 அன்று கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில்